1974 சனவரி 25]

சர்க்காருக்கு அதிக அதிகாரங்கள் இருந்துதான் ஆகவேண்டும் என்பதை இந்த அரசாங்கம் ஏற்றிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அரசின் இந்த எண்ணத்திற்கும் இந்த அரசு விரும்புகிற மாநிலச் சுயாட்சிக்கும் அது விபரீதமாக இருக்கிறதல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையொட்டி துணைக் கேள்விகள் போடவேண்டும். அதை விட்டு விட்டு இன்னொரு இடத்திற்கு போகக்கூடாது.

THIRU B. VENKATASWAMY: Sir, in the Governor's address it has been stated that Water and Power should be on a regional basis. What is the opinion of this Government?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உறுப்பினர் அவர்கள் சொல்வது எனக்கு சரியாக விளங்கவில்லை. மாநிலத்திற்கு மாநிலம் ஓடுகிற ஆறுகள் குறித்து சட்டம் இயற்றுகிற உரிமை நாடாளுமன்றத்திற்கு இருப்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒரு மாநிலத்திற்குள்ளே ஓடுகிற ஆற்று நீரைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் அந்தந்த மாநிலங்களுக்குத்தான் இருக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம்.

Letting of rain water in Palaru

* 167 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to let out water into Palaru river during the rainy seasons; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மழைக் காலங்களில் தண்ணீரை பாலாற்றில் கொண்டு வந்து விடுவது குறித்து திட்டம் ஏதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இந்த பாலாறு விஷயம் 1952-ம் ஆண்டிலிருந்து இருக்கிறது. இதுபற்றி ஒரு குழு சென்று பரிசிலனை செய்து, ஏராளமான குளங்கள் இதன் மூலம் பாசன வசதி பெறுவதன் காரணமாக மழைக் காலங்களில் அதிகப்படி வரும் தண்ணீரைத் தேக்கி இன்னும் அதிகக் குளங்களுக்கு தண்ணீர் கிடைக்கக் கூடிய முறையில் பரிசீலனை செய்யப்படுமா?

1974 சனவரி 25]

நாடாளுமன்றத்தின் அதிகாரவரம்பு மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஆறுகளின் நீரைப் பயன்படுத்துதல், அந்த ஆறுகளின் நீர் குறித்த தகராறுகள் ஆகியவற்றிற்கு மட்டுமென வரையறுக்கப் படலாம், மாநிலங்களுக்கிடையே ஓடும் ஓர் ஆறு குறித்த நீர்த் தகராறு ஏதேனுமிருந்தால் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகள் இடையே அல்லது அவர்களுக்குள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். அத்தகைய பேச்சுவார்த்தைகளினுல் உடன்பாடு ஏற்படாவிட்டால் பிறகு இந்தியத் தலைமை அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் தலைவராக இருக்கும் தேசிய நீர்வாயில்கள் குழு நடுவராக இருந்து அத்தகைய தகராறுகளை தீர்த்து வைக்க லாம். இந்த இறுதி முடிவுக்கு எதிராக தலைமை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்; அந்த மேல் முறையீடு நீதிபதிகள் ஐவருக்குக் குறையாத நீதிபதிகள் குழு வினல் முடிவு செய்யப்படவேண்டும். மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் ஆற்று நீர்த்தகராறு கடன் குறித்து அறிக்கைகள் தயார் செய்ய, தேசிய நீர்வாயில்கள் குழுவிற்கு தொழில் நுட்பப் பிரிவு ஒன்றிருக்கலாம். ஆற்றுநீர் குறித்த ஆணைக்குழு என்ற தனிப் பட்டதொரு குழு அமைப்பது அவசியமற்றதாகும். ஏனெனில் அது வட்டார ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொள்ளமுடியாது. அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும், மேற் சொன்ன திருத்தங்களையொட்டி சட்டம் ஒன்று இயற்றுவதற்கும் நாடாளுமன்றத்தில் சட்டவரைவு எதுவும் கொண்டுவரப்படுவதற்கு முன் சட்ட அமைப்பு, அதன்விவரங்கள் ஆகியவை முதற்கண் தலைமைச் செயலர்கள் மாநாட்டளவிலும் பின்னர் அதைத் தொடர்ந்து முதலமைச்சர்கள் மாநாட்டளவிலும் விரிவாக விவாதிக்கப்படவேண்டும். இந்த யோசனைகளைத் தெரிவித் திருக்கிறேம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : காவிரி ஆற்றுப் பிரச்னை சம்பந்தமாக நாம் மைசூர் அரசாங்கத்தோடு பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் ஹேமாவதி போன்ற ஆறுகளின் குறுக்கே அவர்கள் அணைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனல் நமக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட இழப்புகள் ஏற் படாதவாறு தடுப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா? அதற் கான நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டுள்ளன?

1974 சனவரி 25]

THIRU K. S. KOTHANDARAMIAH: Though it is called Palar, there is neither 'Pal' பால் nor water in it. Unless water is brought from other sources, water will not flow in Palar. Will the Hon. Minister for Public Works tell us whether he would try to bring in waters of Godavari or Krishna via Dharma puri district and then divert the water to Palar?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது வேறு தனிப்பிரச்னை. உறுப்பினரவர்கள் தனியாகக் கேள்வி போடவும்.

சேத்தூர் வாய்க்கால் திட்டம்

* 168 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாயூரம் தாலுகா சேத்தூர் வாய்க்கால் வெட்டப்பட டெண்டர் விட்டு 2 வருட காலமாகியும் வெட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நில ஆர்ஜிதத்திற்கான சில புலன்களின் சர்வே எண்களில் முரண்பாடு இருந்ததால் இத் திட்டம் செயலாக்கத்திற்கு முன்னதாகவே எடுத்துக் கொள்ளப் படாமல் இருந்தது. தற்சமயம் இத்திட்டத்திற்கான வேலைகளில் 95 விழுக்காடு முடிக்கப்பட்டுவிட்டன. மார்ச் 1974-க்குள் மீத முள்ள வேலைகள் யாவும் முடிவடைந்துவிடும்.

கூட்டுறவு நூற்பாலைகள்

* 169 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழகத்தில் தற்போதுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுள் லாபத்தில் இயங்கி வருபவை எவையெவை?